# பிரதமர் மோடி பொருளாதார நிபுணர்களுடன் மத்திய பட்ஜெட் குறித்து ஆலோசனை

## நீண்ட கால வளர்ச்சிக்காக சீர்திருத்தங்களை விரைவுபடுத்த வலியுறுத்தல்

புதுடெல்லி, டிச.31

**பொருளாதார நிபுணர்களுடன் மத்திய பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனையில் பிரதமர் மோடி ஈடுபட்டார். நீண்ட கால வளர்ச்சிக்காக சீர்திருத்தங்களை விரைவுபடுத்த அவர் வலியுறுத்தினார்.**

2026–2027 நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட் பிப்ரவரி 1ந்தேதி தாக்கல் செய்யப்படுகிறது. மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்கிறார்.

இந்நிலையில், பிரதமர் மோடி மத்திய பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனையை தொடங்கினார். நிதி ஆயோக் அலுவலகத்தில் இக்கூட்டம் நடந்தது.

அதில், மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், பிரதமரின் முதன்மை செயலாளர்கள் பி.கே. மிஸ்ரா, சக்திகாந்த தாஸ், தலைமை பொருளாதார ஆலோசகர் அனந்த நாகேஸ்வரன், நிதி ஆயோக் துணைத்தலைவர் சுமன் பெரி, நிதி ஆயோக் தலைமை செயல் அதிகாரி சுப்பிரமணியம், நிதி ஆயோக் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பிரபல பொருளாதார நிபுணர்களான முன்னாள் தலைமை பொருளாதார ஆலோசகர் சங்கர் ஆச்சார்யா, அசோக் பட்டாச்சார்யா, என்.ஆர்.பானுமூர்த்தி, ரிசர்வ் வங்கி நிதிக்கொள்கை குழு முன்னாள் உறுப்பினர் அஷிமா கோயல், தர்மகீர்த்தி ஜோஷி, உமாகாந்த் டாஷ், பினாகி சக்கரவர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பொருளாதார நிபுணர்கள் மற்றும் துறைவாரியான வல்லுனர்களிடம் மத்திய பட்ஜெட்டில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து அவர்களின் கருத்துகளை பிரதமர் மோடி கேட்டறிந்தார்.

இந்த கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியதாவது:–

2047ம் ஆண்டுக்குள், வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடைய வேண்டும். முதலில் இந்தியாவின் கொள்கையாக இருந்த இந்த இலக்கு, மக்களின் உணர்வாக மாறிவிட்டது.

வளர்ச்சியடைந்த இந்தியா இலக்கை அடைய நீண்ட கால வளர்ச்சி ஏற்படுத்தும்வகையில், பல்வேறு துறைகளில் சீர்திருத்தங்களை விரைவுபடுத்த வேண்டும்.

உலகத்தர திறன்களை நாம் கட்டமைக்க வேண்டும். இந்தியாவின் கொள்கை உருவாக்கமும், பட்ஜெட்டும் வளர்ச்சியடைந்த இந்தியா இலக்கை ஒட்டியே இருக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

உற்பத்தி மற்றும் சேவைத்துறைகளில் உற்பத்தி திறனையும், போட்டியையும் அதிகரிப்பது பற்றி பொருளாதார நிபுணர்கள் கருத்துகளை பகிர்ந்து கொண்டனர். குடும்ப சேமிப்புகளை உயர்த்துதல், வலுவான உள்கட்டமைப்பு மேம்பாடு, ஏ.ஐ.யின் பங்களிப்பு ஆகியவை பற்றியும் விவாதிக்கப்பட்டது.

# காசியும், ராமேஸ்வரமும் பிரித்து பார்க்க முடியாத புண்ணிய நகரம்

## காசி தமிழ் சங்கமம் நிறைவு விழாவில் துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் பேச்சு

ராமேஸ்வரம், டிச.31

**"காசியும், ராமேஸ்வரமும் பிரித்து பார்க்க முடியாத புண்ணிய நகரங்களாக விளங்குகின்றன. இந்திய தேசம் குறித்து மகாகவி பாரதியார் கண்ட கனவு பிரதமர் மோடியின் காசி, தமிழ் சங்கமம் மூலம் நிறைவேறியுள்ளது" என ராமேஸ்வரத்தில் நடந்த காசி தமிழ் சங்கமம் 4.0 நிறைவு விழாவில் துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.**




கடந்த 2ந்தேதி வாரணாசியில் காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சி தொடங்கியது. இதில் பிரதமர் மோடி பங்கேற்று உரையாற்றினார். அதன் தொடர்ச்சியாக பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்து வந்தன.

காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சியின் நிறைவு விழாவை தமிழகத்தில் நடத்த முடிவெடுக்கப்பட்டு ராமேசுவரத்தில் நேற்று நடந்தது. சிறப்பு விருந்தினராக துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் பங்கேற்றார். இதில் கவர்னர் ஆர்.என்.ரவி, மத்திய மந்திரிகள் தர்மேந்திர பிரதான், எல். முருகன், பா.ஜனதா மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், சென்னை ஐ.ஐ.டி. இயக்குனர் காமகோடி உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

விழாவில் துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் பேசியதாவது:

இந்த தேசம் வாழ்க என சொல்வதால், நாம் தமிழுக்கு எதிரானவர்களாக மாட்டோம். தொன்மையான காசி நகரமும், உலகின் தொன்மையான தமிழ் மொழியும் இணைவது காசி தமிழ் சங்கமம் என பிரதமர் மோடி தெரிவித்தார். காசியும், ராமேஸ்வரமும் பிரிக்க முடியாத புண்ணிய நகரங்கள்.

அதனால் தான் காசி தமிழ் சங்கமம் 4.0 காசியில் துவங்கி ராமேஸ்வரத்தில் முடிகிறது. உலகின் ஆன்மிக தலைநகரான காசி, பாரதத்தின் பண்பாட்டு மையமாக உள்ளது. தேவாரமும், திருவாசகமும் ஒலிக்கும் தளத்தில் கபீரின் பக்தி பாடல்களும் ஒலிக்கிறது.

முகலாய மன்னர்கள் காசி கோவிலை அழித்த போது, தமிழகத்தில் இருந்தும், பாண்டிய நாட்டிலும் இருந்தும் காசியை காக்க போர் புரிய சென்றனர். நாட்டின் தன்மானத்திற்கும், தர்மத்திற்கும் பாதிப்பு வரும் போது அனைவரும் ஒருங்கிணைந்து போராட வேண்டும்.

எட்டயபுரத்தில் இருந்து சென்ற மகாகவி பாரதி, காசி அரசவையை அலங்கரித்துள்ளார். அவர் தேசத்தை பற்றி மட்டும் சிந்தித்துள்ளார். இந்திய தேசம் குறித்து பாரதியார் கண்ட கனவு, பிரதமர் மோடி மூலம் நிறைவேறி வருகிறது.

அரசின் எந்த திட்டமாக இருந்தாலும் தமிழனின் பெருமையை, இந்தியாவின் பெருமையையும் நிலைநாட்டும் வகையில் உள்ளது. தமிழ் கலாசாரம் குறித்து பிரதமர் மோடி மக்களின் குரல் நிகழ்ச்சியில் பேசினார். கவர்னர் ரவி தமிழில் பேசியதை கேட்டபோது, நானும் ஹிந்தியை கற்றுக்கொள்ள வேண்டும் என்ற உணர்வு வந்தது.

தமிழகத்தில் யார் சொத்துக்கும் ஆசைப்படாத சூழல் வர வேண்டும். உலகின் உன்னத நிலைக்கு நம் பாரதம் வர வேண்டும். பாரத தேசத்தின் உச்சத்தை தமிழகமும் தொட வேண்டும்.

எந்த இடத்தில் இருந்தாலும் அகங்காரம் கொண்டவராக இல்லாமல், மக்களில் ஒருவராக, உங்களில் ஒருவராக இருப்பேன். இன்றைக்கும், என்றைக்கும் பாரத தேசம் ஒன்று தான். இவ்வாறு அவர் பேசினார்.

### நயினார் நாகேந்திரன்

பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் பேசியதாவது:

கலாசாரம், பண்பாட்டில் காசியும், தமிழகமும் சிறந்து விளங்குகிறது. இனிமை, அமுது, பால் என எல்லாமே தமிழாக நினைக்கும் தமிழகத்தில் யாரும் தமிழை முன்னிறுத்துவதில்லை.

பிரதமர் மோடி அயோத்தியிலும், ஐ.நா., சபையிலும் தமிழை முன்னிறுத்தி யுள்ளார். தமிழுக்காக மதுரையில் தமிழ் சங்கம் பாண்டிய மன்னன் காலத்தில் நடத்தப்பட்டது. தமிழை முன்னிறுத்தி பாண்டிய மன்னனாக பிரதமர் மோடி விளங்குகிறார்.

எல்லா மாநிலங்களிலும் தமிழகம் கற்க வேண்டும் என பிரதமர் உத்தரவிட்டுள்ளார். உலகெங்கும் வாழும் ஒவ்வொரு தமிழரும் பிரதமர் மோடியை புகழ வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# 27 முத்திரைத் திட்டங்களின் பணி முன்னேற்றம்: முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையில் ஆய்வுக் கூட்டம்

## உடன்குடி அனல் மின்நிலையத்தை அடுத்த மாதம் செயல்பாட்டுக்கு கொண்டுவர உத்தரவு

சென்னை, டிச.31

**ரூ.13 ஆயிரம் கோடியில் அமைக்கப்பட்டுள்ள உடன்குடி அனல் மின் நிலையத்தை அடுத்த மாதம் செயல்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.**



தமிழக அரசின் 24 நிர்வாகத் துறைகளைச் சேர்ந்த சுமார் ரூ.3,17,693 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 288 திட்டங்கள் முத்திரைத் திட்டங்களாக அடையாளம் காணப்பட்டு, அதன் செயல்பாடுகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. அவற்றில் 85 திட்டங்கள் இதுவரை முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இந்த திட்டங்கள் குறித்து கடந்த 22ந்தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு செய்தார். அதில் 6 துறைகளைச் சார்ந்த சுமார் ரூ.87,941 கோடி மதிப்பீட்டிலான செயல்பாட்டில் உள்ள 27 முத்திரைத் திட்டங்களின் பணி முன்னேற்றம் குறித்து தொடர்புடைய துறைச்செயலாளர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியான ஆய்வு கூட்டம், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று நடந்தது. அதில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகம், எரிசக்தி துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை மற்றும் பொதுப்பணித் துறை ஆகிய 6 துறைகளைச் சார்ந்த சுமார் ரூ.58,740 கோடி மதிப்பீட்டிலான செயல்பாட்டில் உள்ள 27 முத்திரைத் திட்டங்களின் பணி முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

ரூ.13,076.71 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் உடன்குடி அனல் மின் நிலையம் (அலகு I) பணிகள் அடுத்த மாதம் (ஜனவரி) முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டும் என்றும், கோடை காலத்தில் மாநிலம் முழுவதும் தடையின்றி சீரான மின்சாரம் வழங்குவதை உறுதி செய்திட வேண்டும் என்று உத்தரவிட்டார்.

அதனைத்தொடர்ந்து திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனைப் பணிகள் மற்றும் நீலகிரியில் சூழல் பூங்கா அமைக்கும் பணியினை முடித்து பிப்ரவரி மாதம் செயல்பாட்டிற்கு கொண்டு வர முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார். இந்த கூட்டத்தில் தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் துறை செயலாளர்கள் கலந்துகொண்டனர்.

# திருத்தணியில் வடமாநில வாலிபர் மீது தாக்குதல்: விஜய் கண்டனம்

சென்னை, டிச.31

**திருத்தணியில் வடமாநில வாலிபர் மீது தாக்குதல் நடந்ததற்கு நடிகர் விஜய் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

சென்னையில் இருந்து திருத்தணி சென்ற ரெயிலில் இளைஞர்கள் சிலர், மற்றொரு இளைஞரை கொடூரமாக தாக்கிய சம்பவம், தமிழகம் எத்தகைய அபாயகரமான எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்கிறது என்ற அச்சத்தையும், அதிர்வலைகளையும் மக்களிடையே ஏற்படுத்தி உள்ளது.

இளைஞர்கள் தவறான பாதையில் செல்வதை அரசு முன்கூட்டியே கண்டறிந்து தடுக்கவில்லை. இளைஞர்கள் எக்கேடு கெட்டு வீணாய்ப் போனால் நமக்கென்ன என்ற ஆளும் அரசின் அலட்சியத்தையும் பொறுப்பின்மையையுமே இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டுகிறது.

சட்டம்–ஒழுங்கு சீர்கெட்டு, போதைப்பொருட்களால் இளைஞர்களின் எதிர்காலம் சீரழிந்து வருகிறது. தமிழகத்தில் இளைஞர்களை நல்வழிப் பாதையில் கொண்டு செல்லும் திட்டங்கள் இல்லை. இளைஞர்கள் நல்ல முறையில் கல்வி கற்க, ஏற்ற சூழல் இல்லை. தகுதிக்கு ஏற்ற வேலைவாய்ப்புகள் இல்லை. புத்தாக்கம் இல்லை. புதிய முயற்சிகளுக்கு ஊக்கம் இல்லை. இவை எவற்றையும் ஏற்படுத்திக் கொடுக்காமல், யாருக்காக இந்த ஆட்சியை நடத்துகிறீர்கள்?

எஞ்சியிருக்கக்கூடிய ஆட்சிக்காலத்திலாவது போதைப் பொருட்கள் புழக்கத்தை முழுவதுமாக கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கபட நாடக அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ரூ.1 கோடி காசோலை மோசடி: ம.தி.மு.க. எம்.எல்.ஏ.வுக்கு 2 ஆண்டு சிறை

சென்னை, டிச.31–

**காசோலை மோசடி வழக்கில் வாசுதேவநல்லூர் தொகுதி ம.தி.மு.க. எம்.எல்.ஏ. சதன் திருமலைக்குமாருக்கு 2 ஆண்டு சிறை தண்டனை விதித்து சென்னை கோர்ட் தீர்ப்பு அளித்தது.**

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் தொகுதி எம்.எல்.ஏ. சதன்திருமலைக்குமார். ம.தி.மு.க.வைச் சேர்ந்த இவர், தான் செய்து வரும் தொழில் வளர்ச்சிக்காக, சென்னை ராயப்பேட்டையில் உள்ள தனியார் நிதி நிறுவனத்தில் ரூ.1 கோடி கடன் பெற்றார்.

இதற்காக நிதி நிறுவனத்திற்கு ரூ.50 லட்சம் தொகை கொண்ட 2 காசோலைகளை சதன் திருமலை குமார் வழங்கியுள்ளார்.

இந்த நிலையில் அந்த காசோலையை தனியார் நிதி நிறுவனம் வங்கியில் செலுத்தியபோது, அவரது வங்கிக்கணக்கில் பணம் இல்லை என திரும்பியது. இது தொடர்பாக காசோலை மோசடி வழக்கை சென்னை எழும்பூர் கோர்ட்டில் நிதி நிறுவனம் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு எம்.எல்.ஏ., எம்.பி.க்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு கோர்ட்டுக்கு மாற்றப்பட்டு, பின்னர் சென்னை ஜார்ஜ் டவுன் கோர்ட்டுக்கு மாற்றப் பட்டது. இந்த வழக்கின் இறுதிக்கட்ட விசாரணை முடிவடைந்த நிலையில் நீதிபதி சுந்தரபாண்டியன் தீர்ப்பு வழங்கினார்.

இதில் சதன்திருமலைக்குமாருக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ.1 கோடியை 2 மாதங்களுக்குள் நிதி நிறுவனத்துக்கு திருப்பி கொடுக்கவும், இல்லையெனில் மேலும் 3 மாதங்கள் சிறை தண்டனையும் விதித்தார். மேலும் மேல் முறையீடு செய்ய 2 மாதங்கள் கால அவகாசமும், அதுவரை தண்டனையை நிறுத்திவைத்தும் நீதிபதி உத்தரவிட்டார்.

காசோலை மோசடி வழக்கில் ம.தி.மு.க. எம்.எல்.ஏ.வுக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.



# சாலைகளை சீரமைத்து பராமரிக்க அமைச்சர் எ.வ.வேலு உத்தரவு

சென்னை, டிச.31

சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ள கூட்டரங்கில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று நெடுஞ்சாலைத்துறையின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார்.

கூட்டத்தில் அவர் பேசும்போது, 'மழையால் அல்லது போக்குவரத்தால் சேதம் அடைந்த சாலைகளில் உள்ள குழிகள் மற்றும் பள்ளங்களை தற்காலிகமாக சரிசெய்ய, தார், ஜல்லி போன்ற பொருட்களைக் கொண்டு நிரப்பி சீரமைக்கும் பணிகளை செய்து நல்ல முறையில் பராமரிக்க வேண்டும். குறிப்பாக சாலை ஓரங்களில் உள்ள முட்புதர்களை அகற்ற வேண்டும். இந்தப் பணிகளை எல்லாம் ஆய்வு செய்ய நியமனம் செய்யப்பட்டுள்ள கண்காணிப்பு அலுவலர்கள் உடனடியாக ஆய்வு செய்து அறிக்கை அனுப்ப வேண்டும்' என்று கூறினார்.

கூட்டத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் இரா.செல்வராஜ், நெடுஞ்சாலைத்துறை திட்ட இயக்குநர் தெ.பாஸ்கர பாண்டியன், தலைமை என்ஜினீயர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கு.கோ.சத்தியபிரகாஷ், சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர், முதன்மை இயக்குநர் இரா.செல்லதுரை, தரக்கட்டுப்பாடு இயக்குநர் எம். சரவணன், கண்காணிப்பு மற்றும் கோட்ட என்ஜினீயர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

OrchidPharma
— A Dhanuka Group Company —
ஆர்க்கிட் பார்மா லிமிடெட்
பதிவு அலுவலகம்: மனை எண்கள். 121 —128, 128A— 133, 138 —151, 159 —164, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், ஆலத்தூர், செங்கல்பட்டு மாவட்டம் 603110, தமிழ்நாடு, இந்தியா Ph.+91-44-27444471/72/73, Email id: cs@orchidpharma.com, investorrelations@orchidpharma.com Website: www.orchidpharma.com

காகித வடிவிலான பங்குகளின் பரிமாற்ற கோரிக்கைகளை மீண்டும் வைப்பதற்கான சிறப்பு சாளரம் குறித்து பங்குதாரர்களுக்கு நினைவூட்டல் அறிவிப்பு

ஜூலை 02, 2025 தேதியிட்ட செபி சுற்றறிக்கை SEBIHO/MIRSDIMIRSD-PoDIPICIR/2025/97ன் படி, முதலீட்டை எளிதாக்குவதற்கும், முதலீட்டாளர்கள் வாங்கிய பத்திரங்களில் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், காகித வடிவிலான பரிமாற்ற பத்திரங்களை மீண்டும் வைப்பதற்கு மட்டுமே ஒரு சிறப்பு சாளரத்தைத் திறந்துள்ளது என்பதை செபி, பங்குதாரர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறது. ஏப்ரல் 01, 2019 தேதிக்கு முன்னர் தாக்கல் செய்யப்பட்ட மற்றும் ஆவணங்கள்/செயல்முறை/அல்லது வேறுவிதமாகக் குறைபாடு காரணமாக, நிராகரிக்கப்பட்ட/திருப்பி அனுப்பப்பட்ட/நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்படாத கொள்ளப்படாத விண்ணப்பங்களை ஜூலை 07, 2025 முதல் ஜனவரி 06, 2026 வரை ஆறு மாத காலத்திற்கு சமர்ப்பிக்கலாம். இந்தக் காலகட்டத்தில், காகித வடிவிலான பரிமாற்றத்திற்காக மீண்டும் பதிவு செய்யப்படும் பத்திரங்கள் (பட்டியலிடப்பட்ட நிறுவனம்/ RTAவிடம் நிலுவையில் உள்ள கோரிக்கைகள் உட்பட, இன்றுவரை) டீமேட் முறையில் மட்டுமே வழங்கப்படும்.

அதன்படி, அத்தகைய பங்குதாரர்கள் மேற்கூறிய தேவையான தகவல்கள்/ஆவணங்களை நிறுவனத்தின் RTAவிடம் விரைவில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அதற்கான தொடர்புடைய ஆவணங்களை நிறுவனத்தின் இணையதளத்தில் "முதலீட்டாளர் ஆவணங்கள்" என்ற தலைப்பின் கீழ் அணுகலாம்: https://www.orchidpharma.com/invr_corporategovernance.html

ஆர்க்கிட் பார்மா லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
கபில் தயா
தேதி : 31.12.2025 கம்பெனி செயலாளர் மற்றும் இணக்க அதிகாரி

NAME CHANGE
I, Mukund Bhaiya, S/o.Bulaki Das Bhaiya, Date of Birth 03/09/1974, Residing at C-7, Palms Apartment, No:6 Police Commissioner Office Road, Egmore, Chennai 600008., shall henceforth be known as Mukund Kumar Bhaiya.
-Mukund Bhaiya

12-ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தெய்வத்திரு. R.P. ஆதியப்பன், M.A,
மனைவி. தெய்வத்திரு S.சுந்தரவல்லி ஆசிரியை
சென்னை மாநகராட்சி பள்ளி
தோற்றம்: 15.06.1937 மறைவு: 31.12.2013
நினைவு கூறும்
Dr.T.A. ஸ்ரீநிவாசன்
B.Com., M.L., PGDLA., M.B.A., F.C.S., ACIS(UK), Ph.D.,
குடும்பத்தினர், சென்னை
9840800487, 9500050486

மாண்பமை சிறப்பு மாவட்ட MACT நீதிமன்றம், காஞ்சிபுரம்
எம்.சி.ஓ.பி. 244/2023
திருமதி. பாலமணி, க/பெ லேட்.பாபு மற்றும் பலர் ...மனுதாரர்கள் / வாதிகள்
எதிர்
T. காந்திமதி க/பெ தங்கப்பன்
D.No. 14, 10, ஜெய்சங்கர், வார்டு 17, ஒசூர் தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம் – 635109
...1–ம் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்
அறிவிப்பு
மேற்படி வழக்கின் மனுவானது, மேற்படி நீதிமன்றத்தில் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவானது 05.01.2026–ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது. இந்த மனுவின் பேரில் எதிர்மனுதாரர்களும் மற்றும் யாருக்கேனும் ஆட்சேபனை ஏதேனும் இருப்பின் அவர்களும் மேற்படி தினம் காலை 10.30 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரியப்படுத்த வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைபட்சமாக தீர்ப்பு அளிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.
திரு. T. சத்தியமூர்த்தி, எம்.ஏ.பி.எல்., வழக்கறிஞர், காஞ்சிபுரம்

Vi!
எங்களிடம் சொல்லுங்கள்

நாங்கள் உங்களுக்கு இயன்றவரை மிகச்சிறந்த சேவைகளை வழங்க முயற்சிக்கிறோம். ஆனால், ஏதேனும் காரணத்தால் எங்கள் சேவையில் உங்களுக்கு ஏதாவது குறை இருந்தாலோ, சேவையைப் பற்றி கேள்விகள் இருந்தாலோ, தயவுசெய்து எங்களை தொடர்பு கொள்ளுங்கள். கூடிய விரைவில் உங்கள் குறைகளை தீர்த்து வைப்போம்.

Vi கேர்
வருடம் முழுவதும், 24 மணி நேரமும், நீங்கள் எங்களை Vi கேர்-ல் தொடர்பு கொள்ளலாம். உங்களுக்கு சேவைபுரிய காத்திருக்கிறோம். எந்தவிதமான புகார்கள் மற்றும் சேவைகளுக்கு, தயவுசெய்து எங்களது கன்ஸ்யூமர் கேர் நம்பர் 198க்கு (இலவச நம்பர்) கால் செய்யுங்கள். ப்ராடக்ட் மற்றும் சேவைகள் குறித்த கேள்விகளுக்கு பதில் பெற *199# ஐ டயல் செய்யுங்கள். உங்கள் அக்கௌண்ட் விவரங்களை அறிய, உங்கள் Vi மொபைலில் இருந்து பொது தகவல் நம்பர் 199 (இலவச நம்பர்)ஐ தொடர்பு கொண்டு எங்கள் கால் சென்டர் பிரதிநிதிகளுடன் நீங்கள் பேசலாம். Vi மொபைல் நம்பர் தொடர்பான தகவல்களை அறிய, பில் கட்டணத்தை செலுத்த மற்றும் பல சேவைகளுக்கு Google Play Store அல்லது App Store இல் இருந்து Vi App டவுன்லோடு செய்யவும். Vi மொபைல் நம்பர் தொடர்பான தகவல்கள் மற்றும் சிறந்த சலுகைகள் பற்றி அறிய 9654297000 என்ற எண்ணில் whatsapp மூலம் எங்களுடன் இணையுங்கள்.

VAS டிஆக்டிவேஷனிற்கான நடைமுறைகள்
IVR அல்லது SMS மூலம் நீங்கள் சப்ஸ்க்ரைப் செய்த வால்யூ ஆடட் சர்வீஸ்களை எளிதில் டிஆக்டிவேட் செய்துகொள்ள முடியும்.
- எங்களது இலவச எண் 155223க்கு கால் செய்து உங்களுக்கான மொழியினை தேர்வு செய்யுங்கள். பின்னர் நீங்கள் சப்ஸ்க்ரைப் செய்துள்ள வால்யூ ஆடட் சர்வீசஸ் விவரிக்கப்படும். உங்களுக்கு தேவையற்றதை சுலபமாக டிஆக்டிவேட் செய்து கொள்ளலாம்.
- அல்லது, STOP என 155223க்கு SMS செய்தவுடன், சப்ஸ்க்ரைப் செய்துள்ள வால்யூ ஆடட் சர்வீஸ்களை SMS மூலம் பெறுவீர்கள். அதில் தேவையற்ற சேவைகளை நீங்கள் தேர்வு செய்தவுடன், பதில் SMS மூலம் உறுதி செய்யப்பட்டு 4 மணி நேரத்திற்குள் டிஆக்டிவேட் செய்யப்படும்.

மொபைல் நம்பரை உபயோகப்படுத்தாத வாடிக்கையாளர்களுக்காக
- குறைந்தது ₹20 அல்லது அதற்குமேல் பேலன்ஸுடன், இன்கமிங்/அவுட்கோயிங், வாய்ஸ் அல்லது வீடியோ கால், அவுட்கோயிங் SMS, டேட்டா உபயோகம் ஆகியவற்றை, தொடர்ந்து 90 நாட்கள் உபயோகிக்காத ப்ரீபெய்டு வாடிக்கையாளர்களின் கணக்கில் ₹20 டெபிட் செய்து, ஆட்டோமெட்டிக் நம்பர் ரிடென்ஷன் திட்டத்தின் கீழ் (ANRS) 30 நாட்களுக்குள் உபயோகிக்காத காலமாக Vi நீட்டிப்பு செய்யும்.
- இந்த நடவடிக்கைக்கு பின்னரும் தொடர்ந்து ₹20க்கு குறைவாக பேலன்ஸ் இருந்தால், இந்த நம்பர் நிரந்தரமாக துண்டிக்கப்படும்.
- டிஸ்கனெக்ட் செய்த 15 நாட்களுக்குள், ₹20 செலுத்தி, வாடிக்கையாளர் அதே நம்பரை ரீஆக்டிவேட் செய்துகொள்ளலாம்.
- போஸ்ட்பெய்டு வாடிக்கையாளர்கள் குறைந்தபட்ச கட்டணமாக ₹150/3 மாதம் செலுத்தி, அந்த நம்பரை ஸேஃப் கஸ்டடியில் வைத்துக் கொள்ளலாம்.

அப்பிலெட் அத்தாரிட்டியிடம் முறையிடுங்கள்
Vi நடவடிக்கையில் திருப்தியில்லையெனில், கம்ப்ளைண்ட் நம்பருடன், எங்களது கஸ்டமர் சர்வீஸ் ஏஜெண்ட்கள் உடன் 198ல் (இலவச நம்பர்)/99620 99625-ல் ரெஜிஸ்டர் செய்து, புகார் எண்ணை குறிப்பிட்டு எங்கள் அப்பிலெட் அத்தாரிட்டி - திருமதி அகிலா தியாகராஜன் அவர்களிடம் அப்பீல் செய்யலாம்; அல்லது அப்பீல் படிவத்தை பூர்த்தி செய்து appellate.tamilnadu@vodafoneidea.comக்கு இ-மெயில் செய்யலாம். அல்லது திருமதி அகிலா தியாகராஜன், வோடஃபோன் ஐடியா லிமிடெட், ஆதித்யா பிர்லா குழுமம் மற்றும் வோடஃபோன் குழுமம் பார்ட்னர்ஷிப், (CIN No: L32100GJ1996PLC030976) PSA ஃபோர்ட், பிளாட் நம்பர் A1 & A2 & B, நேரு நகர், 1ம் மெயின் ரோடு, மகாபலிபுரம் ரோடு போகும் வழி, பெருங்குடி, சென்னை - 600 096 என்ற முகவரிக்கு புகார் செய்த 30 நாட்களுக்குள் தீர்வு கிடைக்கவில்லையெனில் எழுதுங்கள்.

உங்கள் புகாரை எப்பொழுது பதிவு செய்தாலும், உங்களுக்கான டாக்கெட் நம்பர் மற்றும் கம்ப்ளைண்ட் நம்பரையும் எத்தனை நாட்களுக்குள் உங்கள் புகாருக்கு தீர்வு வழங்கப்படும் என்பதையும் SMS மூலம் பெறுவீர்கள். மேலும் விவரங்கள் மற்றும் நிபந்தனைகளை அறியலாம் www.myvi.in-ல்.

பதிவு அலுவலகம்
வோடஃபோன் ஐடியா லிமிடெட், சுமன் டவர், ப்ளாட் நம். 18, செக்டர் 11, காந்திநகர் 382011, குஜராத்
T: +91 79 6671 4000

Vi வெப்சைட் - www.myvi.in
9092012345